# திருக்குறள் கூறும் தொடர்பாடல் : ஓர் அறிநிலை ஆய்வு

யூட் டினேஸ் கொடுதோர்
எஸ்.ரகுராம்

## ஆய்வுச் சுருக்கம்

ஈரடிகளால் வாழ்க்கைத் தத்துவத்தைப் போதித்தவரும், தமிழர்களின் பண்பாட்டுச் செறிவின் அடையாளமாகவும் திகழும் திருவள்ளுவர் தமிழுக்குத் தந்த நிலையான சொத்து திருக்குறள். அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்று முப்பால் கொண்டு வாழ்வின் அனைத்துச் சூழலுக்கும் பொருந்தும், அனைத்துக் காலத்துக்கும் பொருந்தும் விடயங்களை திருக்குறள் தந்தமையினாலேயே இந்த நவீன உலகிலும் வள்ளுவர் நீடு வாழ்கின்றார். ஆய்வாளரின் இந்த ஆய்வானது திருக்குறளில் திருவள்ளுவர் எவ்விதம் தொடர்பாடல் தொடர்பில் எவ்வாறான கருத்தினை வெளிப்படுத்தியுள்ளார் என்பதினை அறிதலாக அமைந்தது. 1330 குறட்பாக்கள், அவை அனைத்தும் 133 அதிகாரங்களில் உள்ளடக்கம் பெற்றுள்ளன. திருக்குறள் பல்வேறு விடயங்களை உள்ளடக்கியுள்ளது. அவற்றுள் திருக்குறளானது தொடர்பாடல் தொடர்பாக எவ்வாறான கருத்தினை மற்றும் எண்ணத்தினை வெளிப்படுத்துகின்றன, என்பதை அறிதல் இவ்வாய்வின் பிரதான நோக்கமாக அமைந்துள்ளது. இந்த ஆய்வின் எல்லையாக திருக்குறளில் தொடர்பாடல் தொடர்பாக விளக்கியுள்ள குறட்பாக்கள் மாத்திரம் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இந்த ஆய்வின் கருதுகோளாக திருக்குறள் பல்வேறுபட்ட விழுமியக் கருத்துக்களை முன்வைத்துள்ளது அவற்றுள் தொடர்பாடலினை எவ்வாறு மேற்கொள்ள வேண்டும் என்பதினையும் விளக்கியுள்ளது. அவை தொடர்பாடலை சிறப்பாக மேற்கொள்ள துணைபுரிகின்றன. இன்று தொடர்பாடல் தொடர்பாக பல்வேறு புத்தகங்கள், ஆய்வுகள் வெளிவந்தாலும் எமது ஆரம்ப தமிழ் வரலாற்றிலே தோற்றம் கண்ட திருக்குறளில் தொடர்பாடல் தொடர்பாக முக்கிய விடயங்கள் முன் வைக்கப்பட்டுள்ளன. அதன் அடிப்படையில், இந்த ஆய்வானது பகுப்பாய்வு, விபரண ஆய்வு முறையியல்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வின் மூலாதாரமாக திருக்குறளில் தொடர்பாடல் தொடர்பாக எழுதப்பட்ட 12 அதிகாரங்கள் அமைந்துள்ளது. இரண்டாம் நிலைத் தரவுகளாக இந்த ஆய்வுப் பொருண்மையோடு தொடர்புடையதான நூல்கள், ஆய்வு நூல்கள், கட்டுரைகள், ஆய்வுக்கட்டுரைகள் என்பன அமைகின்றன. இத்தகைய ஆய்வுகள் மூலம் வள்ளுவரிடத்தே தொடர்பாடல் பற்றிய சிந்தனை இருந்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளதோடு, அச்சிந்தனைகளும் தேடித் தொகுக்கப்பட்டுள்ளன. மேலும், இத்தகைய ஆய்வுகள், வள்ளுவரின் எதிர்வு கூறும், விஞ்ஞானத் தன்மை வாய்ந்த சிந்தனைகளை வெளிக்கொணர்வதோடு, தொடர்பாடலை வெற்றிகரமாக மேற்கொள்ளவும் வழிகாட்டும் எனலாம்.

திறவுச்சொற்கள் : திருவள்ளுவர், தகவல், இலக்கியம், அறிநிலை, மற்றும் தொடர்பாடல்

## ஆய்வு அறிமுகம்

நல்லதும் தீயதும் சொல்லாலே வரும் ஆதலால், அறநெறி யொழுக் கத்திற்கும், உலகில் வெற்றி பெற்று வாழ்வதற்கும் பயனுள்ள நயனுள்ள இன்சொல் முதன் மையானது. சொல் அறம் என்பது அனை வருக்கும் முக்கியமான ஒன்றாக காணப் படுகின்றது. அரசன் ஆனாலும் சரி ஆண்டி ஆனாலும் சரி படித்தவன் ஆனாலும் சரி பாமரன் ஆனாலும் சரி பணக்காரன் ஆனாலும் சரி ஏழையா னாலும் சரி, அனைவருக்கும் சொல்லறங் காத்தல் நல்லறமாகும்.

"ஆக்கமுங் கேடும் மதனால் வருதலாற் காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு"

நன்மையும் தீமையும் சொல்லி னால் வருவதால் பேசும்போது குற்றமான வார்த்தைகளைச் சொல்லிவிடாத படி கவனத்தோடு பேசவேண்டும். ஈரடிகளால் வாழ்க்கைத் தத்துவத்தைப் போதித்த செம்பொருள் கண்ட சீரியர் தனது திருக் குறளில் பல இடங்களில் நாவடக்கம், இன்சொல், பயனுள்ள சொல், திறம்படப் பேசுதல், அரங்கங்களில் பேசும் முறை, அரசியலார் பேசுந்திறமை, தொடர் பாடலில் கண்ணும் முகமும் கருத்தும் கூறும் விதம், முதலிய பொருள் பற்றி விளக்கி தொடர்பாடலின் தேவை யினையும் அது எவ்வாறு மேற்கொள்ள வேண்டும் என்றும், தொடர்பாடல் மேற்கொள்ள காரணமாக அமைவன எவை என்றும் பல கோணங்களில் நோக்கி அதனை விளக்கியுள்ளார். எவ்வளவு கற்றவர்களானாலும் கற்றவர்கள் சபையில் சிறப்பாக பேசி தம் கருத்தினை வெளிப்படுத்த முடியாவிடின் அவர்களை கற்றவர்களாக கற்றவர்கள் மதிக்க மாட்டார்கள். தொடர்பாடல் திறன் என்பது மனித வாழ்வில் மிகவும் வேண்டப்படும் ஒன்றாக உள்ளது. தற்காலத்தில் இது அடிப்படைத் தேவைகளில் ஒன்றாக மாறியுள்ளது (இளவழகன், 2008).

## வள்ளுவனும் - திருக்குறளும்

திருக்குறள் உலகப் பொதுமறை, எக்காலத்திற்கும் உரிய வழிகாட்டி. திருவள்ளுவர் தமிழுக்குத்தந்த நிலையான சொத்து. திருக்குறளில் 1330 குறட்பாக்கள் உள்ளன. அவை 133 அதிகாரங்களில் உள்ளடக்கப் பெற்றுள்ளன.

'ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி
நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி'

'பழகு தமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில்'

என்று திருக்குறளும், நாலடி யாரும் தமிழின் அடையாளமாகத் திகழ்கின்ற தனை இவ்விரு கூற்றுக்களும் வெளிப் படுத்துகின்றன. அடிப் படையிலே இவை இரண்டும் வாழ்க்கைத் தத்துவங்களையும், வாழ்க்கை அறநெறிகளையும், வாழ்வியல் விழுமியங் களையும், பல கோணங்களில் புலப்படுத்தி உள்ளமையினை அவதா னிக்கமுடியும்.

"எல்லாப் பொருளும் இதன்பால் உள
இதன் பால்
இல்லாத எப்பொருளும் இல்லையால்:
சொல்லால்
பரந்தபாவால் என் பயன்? வள்ளுவனார்
ஒத அழுக்கு அற்றது உலகு"

என்று வள்ளுவரதும் திருக் குறளினதும் அருமை பெருமைகளைக்கூறி நிற்கிறார் மதுரைப் பெருமதனார் (சுப்பிரமய ணியன், 2011).

## தொடர்பாடல்

தொடர்பாடல் என்பது மனிதனின் அத்தியாவசிய தேவைகளில் ஒன்றாக மாறிவிட்ட சூழ்நிலையிலே தொடர் பாடல் பற்றிய பழந்தமிழரின் சிந்தனைகள் பற்றி அறிந்து கொள்ள வேண்டியது காலத்தின் தேவையாக உள்ளது. மனிதன் ஒரு சமூகப் பிராணி அந்த வகையில் அவன் பிறரோடு தொடர்பாடலை மேற் கொள்வதன் மூலமே வாழ்வின் தேவைகளை நிறை வேற்றிக்கொள்ள முடியும். இருப்பினும், தொடர்பாடலை யாரோடு, எவ்வாறு, எவ்வேளையில், எவ்விதம் மேற்கொள்ள வேண்டும் என்ற அறிவின்மையால், தொடர்பாடல் பல உறவுமுறிவுகளை ஏற்படுத்தி விடுகின்றது. தொடர்பாடல் என்பது ஓரிடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்கு தகவலைக்கடத்தும் செய லாகும். மனிதன் ஒரு தொடர்பாடும் விலங்கு எனக் கூறலாம். மனிதன் எப்போதும் குழுக்களாக வாழவே விரும்பு கின்றான். அவன் ஆரம்பத்தில் குழுவாக வாழும்போது அங்கத்தவர்களிடை யேயும், குழுக் களிடையேயும் தொடர் பாடல் செய்ய முற்பட்டான். இதனால் தொடர்பாடல் த்திறன் மேலும் விருத்தியானது.

தொடர்பாடல் என்பது குறிப் பிட்ட ஊடகமொன்றை பயன்படுத்தி தகவல் களை அல்லது செய்திகளை அனுப்புகின்ற செயற்பாடாகும். இங்கு ஓர் தகவலை அனுப்புனர் ஓர் ஊடகத்தின் ஊடாக அனுப்பும் போது அது பெறுநரைச் சென்றடைகின்றது. எல்லாச் சந்தர்ப்பங் களிலும் தொடர்பாடல் ஒன்றை மேற் கொள்வதற்கு அனுப்புநர், தகவல், ஊடகம், மற்றும் பெறுநர் போன்ற கூறுகள் அவசியமாகின்றன. தொடர் பாடலில் உரையாடல், பாடல், உரை நடை, அங்க வரைபுகள், சைகைகள், தொடுகைகள், பார்வைகள், ஓவியங்கள், வரைபடங்கள் மற்றும் எழுத்தாபனங்கள் போன்ற வாய்மொழியற்ற ஊடகங்க ளையும் காணமுடிகின்றது.

## திருக்குறளில் தொடர்பாடல்

வள்ளுவன் கூறிய மொழி 'பொய்யா மொழி' அது காலம், இனம், மொழி, சமயம், மற்றும் தேசம் என்னும் எல்லை தாண்டி அனைத்துலகிற்கும் பொருந்தக் கூடிய 'பொதுமறையாக' உள்ளது. வள்ளுவன் கூறாத, நோக்காத, சிந்திக்காத விடயங்கள் இல்லை என்று கூறும் அளவிற்கு முக்காலத்திற்கும் பொருந்தக் கூடிய குறட்பாக்களை வள்ளுவன் பாடியுள்ளமை வியக்கத்தக்கது.

இந்தவகையில், வள்ளுவன் பார் வையில் தொடர்பாடல் பற்றி ஆராயும் போது தொடர்பாடல் குறித்து வள்ளுவன் கொண்டிருந்த மனநிலை பற்றி ஆராய்ந்து அறிய வேண்டியது அவசியமாகின்றது.

திருக்குறளின் அதிகார 'வைப்பு முறை' என்பது குறித்த அதிகாரத்தின் தேவை யினையும் அது வரையறுக் கப்பட்டதன் நோக்கத்தையும் வெளிப்படுத்துவதாக அமையும்.

இந்த ஆய்வில் வள்ளுவன் தொடர் பாடல் பற்றிக் கூறிய பல்வேறு குறட் பாக்களும் பரவலாக முப்பாலிலும் இருந்து எடுக்கப்பட்டுள்ளது. இதுவே தொடர்பாடலின் தேவை, அதன் முக்கியத்துவம் போன்றவற்றை தனித்து ஒரு அதிகாரத்திலே கூறிவிட முடியாத அளவிற்கு கனதியானதாக இருந்து ள்ளமை தெளிவாகின்றது எனலாம்.

"கற்றாருட் கற்றா ரெனப்படுவர்
கற்றார்முன் கற்ற செலச்சொல்லு வார்"

கற்றவர் முன்னே ஒருவர் தான் நன்கு கற்றுணர்ந்த பொருளை அஞ்சாது பேச வேண்டும். போர்க்களத்தில் பகைவர்களுக்கு அஞ்சாமல் உயிரை விடக்கூடியவர்கள் அபூர்வமல்ல. ஆனால் சபையில் அச்சமில்லாமல் பேசக் கூடியவர்கள் ஆர்வம். கை நடுங்குவோன் வாளும், வாய் நடுங்குவோன் நூலும் பயனில.

"பகையகத்துப் பேடிகை யொள்வாள்
அவையகத்தஞ்வு மவன் கற்ற நூல்"

நல்ல சபையில் ஒரு பொருளை நன்கு சொல்லத் தெரியாதவர், பல கற்றும் பயனில்லை அறிஞர் அவைக்களத்தை அஞ்சித் தாம் கற்றதைத் திறம்படப் பேசத் தெரியாதார் உயிரோடிருந்தும் இறந்தவருக்குச் சமமானவர் என திருக்குறள் சொல்வன்மையையும் பேசும் திறனையும் பற்றி விளக்கியுள்ளது.

## தொடர்பாடலில் கண்ணும் முகமும் கருத்து கூறும் விதம்

தொடர்பாடலை மேற்கொள்ளும் போது எதிரே இருப்பவர்கள் என்ன நோக்கங்கொண்டிருக்கிறார்கள் என் பதினை குறிப்பறிந்து பேசவேண்டும். அகத்தினை கண்ணாடியாக முகம் விளங்குகின்றது. "குறிப்பறிதல்" என்பது இன்னொருவனுடைய மனக்குறிப்பை அவன் வாயாற்சொல்லாமல் அவனுடைய முகத்தைப் பார்த்தே அறிந்து நடக்கக் கூடிய திறமை. வாயால் கூறமுடியாத நிலைமையிலிருக்கின்ற ஒருவனுடைய மனக்குறிப்பை அறிந்து அதன்படி நடக்கத்தெரிந்தவர், தொடர்பாடலில் உள்ள உடல்மொழியின் முக்கியத்து வத்தினை நன்கு அறிந்தவராவர்.

"அடுத்தது காட்டும் பளிங்குபோ
ளனஞ்சங்கடுத்தது காட்டு முகம்"

தொடர்பாடலினை மேற்கொள்ள மற்றொரு சாதனமாக விளங்குவது கண், கண்ணிலே தெரியும் கருத்து பிறர் மனக்குறிப்பைக் கண்பார்த்து அறியாத வர்களுக்குக் கண்ணிருந்தும் பயனென்ன? உறுப்புக்கள் எல்லோருக்கும் ஒன்று தான் எனினும், வாயாற் சொல்லாமல் பிறர் குறிப்பறிந்து கொள்ளும் அறிவாளி, ஒரு தனிச் சிறப் புடையவனாவான் என திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

"நுண்ணிய மென்பார்அளக்குங்கோல்
காணுங்கார் கண்ணல்ல தில்லை பிற"

உடல்சார் மொழிகளில் முகமும் கண்ணும் முக்கிய இடம் வகிக்கின்றன. அந்த வகையில் வள்ளுவர் முகம் மற்றும் கண் போன்றன தொடர்பாடல் சாதனமாக எவ்வாறு தொழிற்படுகின்றன என்பது தம் குறட்பாக்கள் மூலம் விளக்குகிறார்.

## தொடர்பாடலின் அறமும் பொருளும்

ஒருவன் தொடர்பாடலினை மேற் கொள்ளும் போது தொடர்பாடல் அறத்தினை பின்பற்றியே செயற்படுதல் வேண்டும். யா நலத்துள்ளும், நா நலம் உயர்ந்த நலமாகும். ஆக்கமும் கேடும் அதனால் வரும். எனவே, தொடர் பாடலினை மேற்கொள்ளும் போது அதன் பொருளை கவர்ந்து அதன் பால் அவர் ஈர்க்கப்படும் வகையில் மேற் கொள்ளுதல் சிறந்ததாகும்.

"கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்
கேளாரும் வேட்ப மொழிவதாஞ் சொல்"

தொடர்பாடலில் அனுப்புனர் பெறுனர் ஆகிய இருவரும் முக்கியமான வகிபாகத்தினை வகிக்கின்றனர். ஒருவர்

உரையாடலினை மேற்கொள்ளும் போது தம் சொல்லை வெல்லும் மற்றொரு சொல் இருக்காத வண்ணம் அமைத்தல் சிறந்தது. அதுவே கேட்போரை விரும்பி கேட்கச் செய்யும். மேலும் தொடர்பாடலினை மேற்கொள்பவர் பிறர் பேசுவதில் பயனுள்ளதைக் கொள்ள வேண்டும். இதுவே தொடர்பாடல் அறம் என திருக்குறள் விளக்குகின்றது (சுப்பிரமணியம், 2008).

**"சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை இகல்வெல்லல் யார்க்கு மரிது"**

மாசற்ற சில மொழிகளை மனத்தி ற்பதியும்படி பேசத் தெரியாதவர்களே தேவையில்லாத பல வார்த்தை களைப் பேச விரும்புவர். பொருள்பட பேசுதல், சுருங்கச்சொல்லி விளங்க வைத்தல், தெளிவாக பேசல் போன்றன தொடர் பாடலின் அறமாகும்.

**தகவலின் பெறுமானம்**

தகவல் பெறுமதி வாய்ந்ததாக அமையும் போதே அங்கு சிறந்த தொடர்பாடல் நடைபெறும். எனவே தகவலினை வழங்கும் போது இனிய சொற்களை இணைத்து வன்சொற்களை தவிர்த்து வழங்க வேண்டும். பேசுபவர் மனமுவந்து ஒரு பொருளைத் தருவதிலும், முகமலர்ந்து அன்புடன் இனிய மொழிகள் கூறுவது மேலானது. வஞ்சனையற்ற இனிய வார்த்தைகளோடு தானம் கொடுத்தால் அந்த தானத்தைக் காட்டினும் சிறந்தது இனிய வார்த்தையே.

**"அகனமர்ந் தீதலி னன்றே மகனமர்ந் தின்சொல்லாகப் பெறின்"**

பொருளுடைய மற்றும் பண்புடைய இன்சொற்களால் தகவலின் பெறுமானம் அதிகரிக்கப்பட்டு அது பெறுநரை விரைவாக கவரும் என்பதில் ஐயமில்லை.

**"இனிய வுளவாக இன்னாத கூறல் கனியிருப்பக் காய்கவர்ந்தற்று"**

இனிய பழங்கள் நிறைந்த ஒரு மரத்தில் ஏறிய ஒருவன் இனிப்பான பழங்களைப் பறித்துக்கொள்ளாமல், அதிலுள்ள கசப்பும் புளிப்புமுமான காய்களைப் பறிப்பது எப்படியோ, அப்படித்தான் நல்ல வார்த்தைகளிருக்க அவற்றை விட்டுக் கடுஞ்சொற்களைப் பேசுவது. இங்கு தகவலின் பெறுமானம் தகவல் அனுப்புநரின் அனுப்பும் விதத்தில் தங்கியுள்ளது.

**பயனுள்ள சொல் கூறலும், புறம் கூறாமையும்**

பயனில சொல்லாமை என்பது, பயனற்ற வீண்வார்த்தைகளைப் பேசாமலி ருப்பதாகும். பொதுவாக எவரிடத்திலும் எப்போதும் பயனற்ற பேச்சுக் களைப் பேசாமல் இருப்பது சிறந்தது. தொடர் பாடலை மேற்கொள்ளும் போது பயனுள்ள சொற்களினை பயன்படுத்த வேண்டும். பலர் கூடிய சபையில் பண்பி ன்றி, பயனிலாது சொல்லலைப்பவன், நயமிழந்து, நலமிழந்து வருந்துவான்.

**"சீர்மை சிறப்பொடு நீங்கும் பயனில நீர்மை யுடையார் சொலின்"**

தொடர்பாடலை மேற்கொள்ளும் போது அது நேர்மையான முறையில் அமைதல் வேண்டும். அதுவே தொடர் பாடல் ஒழுக்கமாகும். புறங்கூறிப் பொய்த்து உயிர் வாழுதலைக் காட்டிலும், புறங்கூறாமல் உயில் விடுதல் நல்லது.

**"கண்ணின்று கண்ணறச்சொல்லினுஞ் சொல்லறக்முன்னின்று பின்னோக்காச் சொல்"**

ஒருவன் இல்லாத சமயம் பார்த்து அவனைப் பற்றி புறம் சொல்கின்றவனைப் பூமியானது அவனைச் சுமப்பது தனது கடமை எனக்கருதி சுமந்து கொண்டிருக்கிறது. உலகில் பல துன்பங்கள் புறம் கூறுவதினாலே உண்டாகின்றது. எனவே புறங் கூறலைத்தவிர்த்து நேர்மையாகவும், நடுநிலைமையாகவும் தொடர்பாடலை மேற்கொள்ள வேண்டும். மனிதத் தொடர்பாடலுக்கு மாத்திரமல்ல அனைத்து ஊடகங்களுக்கும் நடுநிலைமையும், நேர்மையான செய்தி அறிக்கையிடலும் அவசியமாகும். அதுவே மக்கள் மத்தியில் நம்பிக்கை தன்மையை ஏற்படுத்தும்.

## தொடர்பாடல் பற்றி வள்ளுவரின் மனநிலை

தொடர்பாடல் திறன் என்பது ஒருவருக்கு அதில் இருக்கக்கூடிய திறமையை அல்லது ஆற்றலை குறிக்கிறது. பொதுவாக சிறந்த கல்வி, பயிற்சி, அனுபவம், ஊடாக தொடர்பாடல் விருத்தி செய்யப்படுகிறது.

திருவள்ளுவர் தமது திருக்குறளில் தொடர்பாடல் பற்றி சிறந்த ஓர் விளக்கத்தினை தருகின்றார். பத்துக்கும் மேற்பட்ட அதிகாரங்களால் தொடர்பாடல் சார்ந்து பேசியுள்ளார். அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் ஆகிய முப்பாலிலும் தொடர்பாடல் தொடர்பாக திருவள்ளுவர் பேசியுள்ளார்.

### அறத்துப்பால் அதிகாரம்

| | |
|---|---|
| 1) இனியவை கூறல் | 10 |
| 2) புறங்கூறாமை | 19 |
| 3) பயனில் சொல்லாமை | 20 |
| 4) வாய்மை | 30 |
| 5) மெய்யுணர்தல் | 36 |

### பொருட்பால் அதிகாரம்

| | |
|---|---|
| 1) கேள்வி | 42 |
| 2) சொல்வன்மை | 65 |
| 3) குறிப்பறிதல் | 71 |
| 4) அறையறிதல் | 72 |
| 5) அவையஞ்சாமை | 73 |

### காமத்துப்பால் அதிகாரம்

| | |
|---|---|
| 1) குறிப்பறிதல் | 110 |
| 2) களவு நிலை உரைத்தல் | 122 |

திருவள்ளுவர் தமது திருக்குறளில் அகத்தொடர்பாடல், இருவருக் கிடையிலான தொடர்பாடல், சிறுகுழுத் தொடர்பாடல், மற்றும், வெகுஜனத் தொடர்பாடல் முறைகளை பற்றியும் விளக்கி தொடர்பாடலின் தேவையினையும் அதன் சிறப்பினையும் உலகறியச் செய்துள்ளார்.

## முடிவுரை

தற்காலத்தில் தொடர்பாடலின் திறன் நன்கு உணரப்பட்டு அதனை விருத்தி செய்வதற்கு பல்வேறு விதமான நடவடிக் கைகள் மேற்கொள்ளப் படுகின்றன. ஆனால் தொடர்பாடல் முறையானது மனித வர்க்கத்தின் அளவுக்கு பழைமை வாய்ந்த ஒன்றாக உள்ளது. அதற்கு சிறந்த எடுத்துக்காட்டு திருக்குறள். மனித வாழ்வில் மிகவும் அவசியமான ஒன்று தொடர்பாடல் அது சிறந்ததாக அமையும் போது மனித வாழ்வு சிறக்கும் என்பதே திருவள்ளுவரின் கூற்று. இன்று தொடர் பாடல் குறித்து பல்வேறு புத்தகங்கள், ஆய்வுகள் வெளிவந்தாலும் எமது ஆரம்ப தமிழ் வரலாற்றிலே தோற்றம் கண்ட திருக்குறளில் தொடர்பாடல் தொடர்பாக முக்கிய விடயங்கள் முன் வைக்கப் பட்டுள்ளன. தற்காலத்தில் மனிதன்

விஞ்ஞானத்திலும், தொழில்நுட்பத்திலும் வளர்ச்சி அடைந்திருந்தாலும் தனித்து வாழ முடியாதவனாகவே உள்ளான். அவன் எப்போதும் குழுவாகவே வாழ விரும்புகின்றான். இருந்த போதிலும் குழுக்களுக்கிடையிலும், தனிநபரிடையேயும் தொடர்பாடலை மேற்கொள்ள பல சவால்களை எதிர்நோக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது. தொடர்பாடல் உறவுகளை இணைக்கவும், பலப்படுத்தவும், பகைமையைப் போக்கவும், தனிமையைத் தவிர்க்கவும் துணைபுரிகின்றது. இன்றைய அவசர உலகில் தொடர்பாடலினைச் சரியாக மேற்கொள்ளாமையினால் உறவுமுறிவு களும், பகைமை எண்ண ங்களும், உறவு விரிசல்களும், தனிமையும் ஏற்படுகின்றது. இதனைத் தவிர்க்கும் முகமாகவே திருவள்ளுவர் தமது குறட்பாக்களில் தொடர்பாடலுக்கு முக்கியத்துவம் கொடுத்து அதன் பயன்களை விளக்கியுள்ளார் எனலாம்.

இந்த ஆய்வில் அவையை அறிந்து பேசுதல், சொல்வன்மையும் பேசும் முறையும், தொடர்பாடலில் கண்ணும் முகமும் கருத்து கூறும் விதம், தொடர்பாடலின் அறமும் பொருளும், மற்றும் தகவலின் பெறுமானம் போன்ற பிரிவுகளாக பிரித்து வள்ளுவர் கூறும் தொடர்பாடல் சிந்தனைகள் நோக்கப்பட்டு ள்ளன. எனவே இந்த ஆய்வின் ஊடாக திருவள்ளுவர் தொடர்பாடலுக்கு அளித்த முக்கியத்துவம் புலனாவதோடு தொடர் பாடலை வெற்றிகரமான தொடர்பாட லாக்குவதற்கு வேண்டிய உத்திகளும் கண்டறியப்பட்டுள்ளன.

## உசாத்துணை

இளவழகன், ப. (2008). தமிழ் இலக்கியச் சிகரங்கள் ஐம்பது நர்மதா பதிப்பகம், சென்னை.

சுப்பிரமயணியன், ச. வே. (2011). சங்க இலக்கியம், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

சுப்பிரமணியம், வ. (2008). தண்டியலங்காரம் (தெளிவுரை), முல்லை நிலையம், சென்னை.

பழனியப்பா பிரதர்ஸ். (1987). திருக்குறள் (தெளிவுரை) நாமக்கல் கவிஞர் உரை, சென்னை,.

புலியூர் கேசிகன். (2009). தொல்காப்பியம், (தெளிவுரை), பாரி நிலையம், சென்னை.